தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்ய இனி ஆதார் கட்டாயம்!

ஜூலை 1–ம் தேதி முதல் அமலாகிறது

டெல்லி, ஜூன்.12

ஐஆர்சிடிசி கணக்குடன் ஆதாரை கட்டாயம் இணைக்க வேண்டும். ஜூலை 1 ஆம் தேதி முதல் ஆதார் சரிபார்ப்பு செய்யப்பட்ட பயனர் மட்டுமே தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்ய முடியும் என்று ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இனி பயனர்கள் தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்ய வேண்டும் என்றால் ஐஆர்சிடிசி கணக்குடன் ஆதார் இணைப்பு கட்டாயம் ஆகிறது. இந்தியாவில் போக்குவரத்து அமைப்பின் உயிர்நாடியாக இருப்பது ரயில்வேதான். நாடு முழுவதும் தினமும் ஆயிரக்கணக்கான ரயில்கள் இயக்கப்பட்டு வருகின்றன.

இந்த ரயில்களை பல கோடி மக்கள் பயன்படுத்துகிறார்கள். தொலை தூர பயணம் என்றால் பயணிகள் முதலில் தேர்வு செய்வது ரயில்களைத்தான். ரயில்களை பொறுத்த வரை தற்போது 60 நாட்களுக்கு முன்பாக டிக்கெட் முன்பதிவு செய்யும் வசதி உள்ளது.

இதனால் முன்கூட்டியே திட்டமிடும் பயணிகள், 2 மாதத்திற்கு முன்பாகவே டிக்கெட் முன்பதிவு செய்துவிடுவது வழக்கம். முக்கியமான வழித்தடங்களில் முன்பதிவு தொடங்கிய சில நட்களில் அனைத்து டிக்கெட்டுகளும் விற்று தீர்ந்துவிடும்.

அதாவது சென்னையில் இருந்து நெல்லைக்கு செல்லும் கன்னியாகுமரி அதிவிரைவு ரயில், நெல்லை சூப்பர் பாஸ்ட், அனந்தபுரி, வந்தே பாரத், செந்தூர் எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட ரயில்களில் எல்லாம் டிக்கெட் கிடைப்பது பெரிய பாக்கியம்தான் என சொல்லும் அளவுக்கு டிக்கெட்டுகள் மின்னல் வேகத்தில் காலியாகிவிடும். கடைசி நேரத்தில் டிக்கெட் எடுக்க பிளான் போடுபவர்கள் தட்கல் டிக்கெட்டை முயற்சிக்கிறார்கள்.

ஒரு ரயிலில் உள்ள 20 சதவீத டிக்கெட்டுகள் தட்கலுக்கு ஒதுக்கப்படுகிறது. இந்த தட்கல் டிக்கெட் பெரும்பாலும் இடைத்தரகர்களுக்கே கிடைத்து விடுவதாகவும், தேவைப்படும் பயணிகளுக்கு கிடைப்பது இல்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகிறது. இதனால் தட்கல் புக்கிங்கில் அதிரடி மாற்றங்களை இந்திய ரயில்வே எடுத்து வருகிறது. இதன்படி வரும் ஜூலை 1 முதல் புதிய நடைமுறை அமலுக்கு வர உள்ளது.

இது குறித்த விவரம் வருமாறு:

ஜூலை 1 ஆம் தேதி முதல் ஆதார் அங்கீகாரம் உள்ள யூசர் ஐடிக்கள் வழியாக மட்டுமே தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்ய முடியும். ஜூலை 15 ஆம் தேதி முதல் தட்கல் டிக்கெட் முன்பதிவு செய்யும் போது ஆதார் வெரிபிகேஷன் செய்யப்படும்.

அதாவது, ஆதார் எண் அடிப்படையில் வெரிபிகேஷன் முடிந்த பிறகே தட்கல் டிக்கெட் புக்கிங் செய்ய முடியும்.

★ ரயில்வேயால் அங்கீகரிக்கப்பட்ட ஏஜெண்ட்கள் டிக்கெட் முன்பதிவு செய்ய முதல் அரை மணி நேரம் அனுமதி கிடையது. அதாவது, ஏசி வகுப்புகள் என்றால் காலை 10 மணி முதல் 10.30 மணி வரை ஏஜெண்டுகள் முன்பதிவு செய்ய முடியாது.

சாதாரண வகுப்பு டிக்கெட்டுகளுக்கு11மணிக்கு தட்கல் டிக்கெட் ஓபன் ஆகும் நிலையில், 11.30 மணி வரை புக்கிங் செய்ய முடியாது.

★ ரயில் தட்கல் டிக்கெட் முன்பதிவில் சாதாரண பயணிகளுக்கு டிக்கெட் கிடைப்பதை உறுதி செய்யும் விதமாக இந்த அதிரடி மாற்றங்களை ரயில்வே கொண்டு வந்துள்ளது.

★ அதேபோல ரயில் புறப்படுவதற்கு முன்பாக தற்போது சார்ட் லிஸ்ட்கள் 4 மணி நேரத்திற்கு முன்பாக வெளியிடப்படுகிறது. கடைசி நேரத்தில் சார்ட் லிஸ்ட் வெளியாவதால், டிக்கெட் கன்பார்ம் ஆவாத பயணிகள் கடைசி நேரத்தில் அவசர அவசரமாக மாற்று வழியை தேடும் நிலை உள்ளது.

கடைசி நேரத்தில் பேருந்துகளிலும் டிக்கெட் கிடைக்காத நிலை உள்ளதால், இதை சரி செய்யும் விதமாக திட்டத்தை ரயில்வே அறிவித்துள்ளது.

அதன்படி உறுதிப்படுத்தப்பட்ட பயணிகள் பட்டியலை அவர்கள் ரயில் புறப்படுவதற்கு 24 மணி நேரம் முன்னரே தெரிந்து கொள்ளும் வகையில் புதிய திட்டத்தினை ரயில்வே எடுத்துள்ளது.

சோதனை அடிப்படையில் மேற்கு ரயில்வே மண்டலத்தில் பிகானேர் பகுதியில் இந்த திட்டம் சோதனை கட்டமாக அறிமுகப்படுத்தப்பட்டிருக்கிறது.

வெளிமாநில தொழிலாளர்கள் கணக்கெடுப்பு தமிழ்நாடு அரசு அதிரடி உத்தரவு

சென்னை, ஜூன்.12

தமிழ்நாட்டில் பணியாற்றும் வெளிமாநில தொழிலாளர்கள் குறித்த விவரங்களை ஆன்லைனில் பதிவேற்றம் செய்யுமாறு தமிழ்நாடு அரசு அதிரடி உத்தரவை பிறப்பித்துள்ளது. தமிழ்நாட்டில் கோடிக்கணக்கான வடமாநில தொழிலாளர்கள் அனைத்து நிறுவனங்களிலும் பணியாற்றி வருகின்றனர். இவர்களை கணக்கெடுக்கும் பணியை தமிழ்நாடு அரசு தொடங்கியுள்ளது.

இது தொடர்பாக அனைத்து தொழில் நிறுவனங்களுக்கும் தமிழ்நாடு அரசு முக்கிய உத்தரவை பிறப்பித்துள்ளது. திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் வெளியிட்டிருக்கும் அறிவிப்பில், அனைத்து நிறுவனங்களும் தங்களிடம் பணியாற்றும் வட மாநில தொழிலாளர்களின் விவரங்களை ஆன்லைனில் பதிவேற்றுமாறு தெரிவித்துள்ளார். திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு முழு விவரம்: திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள கடைகள், வணிக நிறுவனங்கள், ஓட்டல்கள், தொழிற்சாலைகள், மருத்துவமனைகள், உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிகள், கல்லூரிகள், கட்டுமான ஒப்பந்த நிறுவனங்கள், மோட்டார் போக்குவரத்து நிறுவனங்கள், செங்கல் சூளைகள், உள்ளிட்ட அனைத்து வணிகம்/தொழில் நிறுவனங்களில் பணிபுரியும் வெளிமாநில தொழிலாளர்களின் ஆதார் எண், செல்போன் எண், வங்கி கணக்கு எண் மற்றும் மாநிலம் உள்ளிட்ட விவரங்களை அவர்களை பணிக்கு அமர்த்திய நிறுவனங்கள் தொழிலாளர் துறையின் இணையதளத்தில் முழுமையாக பதிவேற்றம் செய்ய வேண்டும். மேலும், தெரு வியாபாரம் உள்ளிட்ட சுயமாக தொழில் செய்யும் வெளிமாநில தொழிலாளர்கள் பயனாளர் குறியீடு மற்றும் கடவுச் சொல் ஏற்படுத்தி மேற்படி தொழிலாளர் துறையின் இணையதளத்தில் தங்களது முழு விவரத்தை பதிவேற்றம் செய்ய வேண்டும். வெளிமாநில தொழிலாளர்களை பணிக்கு அமர்த்தியுள்ள வணிக நிறுவனங்கள் தங்கள் நிறுவனங்களில் பணிபுரியும் வெளிமாநில தொழிலாளர்களை மேற்படி தொழிலாளர் துறையின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்வதுடன் அவ்விரங்களை சம்பந்தப்பட்ட துறைக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

மேலும், 5 அல்லது அதற்கு மேற்பட்ட வெளிமாநில தொழிலாளர்களை பணிக்கு அமர்த்திய ஒப்பந்ததாரர் நிறுவனங்கள் 1979ம் ஆண்டு மாநிலம் விட்டு மாநிலம் இடம் பெயரும் தொழிலாளர் சட்டத்தின் கீழ் ஒப்பந்ததாரர்கள் உரிமம் பெற்று மேற்படி வெளிமாநில தொழிலாளர்கள் விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முக்கிய அறிவிப்பை வெளியிட்டுள்ளார். திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அறிவிப்பின் சாரம்சம் வெளிமாநில தொழிலாளர்களின் முழு விவரங்களையும் நிறுவனங்கள் பதிவேற்ற வேண்டும், ஆதார் எண், செல்போன் எண், வங்கி கணக்கு எண் மற்றும் மாநிலம் உள்ளிட்ட விவரங்கள் கட்டாயம் இடம்பெற வேண்டும் ★ தெரு வியாபாரம் உள்ளிட்ட சுயமாக தொழில் செய்யும் வெளிமாநில தொழிலாளர்களின் விவரங்களையும் அரசு ஊழியர்கள் சேகரிக்க வேண்டும். ★ஒப்பந்ததாரர்கள் உரிமம் பெற்று மேற்படி வெளிமாநில தொழிலாளர்கள் விவரங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய வேண்டும்.

சமரசம் புஸ்சாகி முற்றும் உட்கட்சி பூசல் புதிய நிர்வாகிகளை நியமித்த ராமதாஸ்

திருப்பூர், ஜூன்.12

திருப்பூர் மாவட்ட 8 சட்டமன்ற தொகுதிக்கும் மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாவட்ட தலைவர்களை பாமக நிறுவனர் ராமதாஸ் நியமித்துள்ளார். பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் ராமதாஸிற்கும், கட்சியின் தலைவர் அன்புமணிக்கும் இடையே உட்கட்சி மோதலானது உச்சகட்டத்தை எட்டி வருகிறது. இருவரும் மாறி, மாறி நிர்வாகிகளை நியமித்து வருகின்றனர். அடுத்தடுத்து நிர்வாகிகள் நீக்கம் மற்றும் நியமனம் காரணமாக பாமகவில் மோதல் மேலும் முற்றி வருகிறது. ராமதாஸ் தமிழகம் முழுவதும் பாட்டாளி மக்கள் கட்சியில் உள்ள அன்புமணியின் ஆதரவாளர்களை நீக்கிவிட்டு புதிய நிர்

வாகிகளை அடுத்தடுத்த நியமனம் செய்து வருகிறார். அதன்படி இதுவரை 60க்கும் மேற்பட்ட கட்சி மாவட்டங்களுக்கு புதிய நிர்வாகி களை நியமித்துள்ளார். மேலும், தைலாபுரம் இல்லத்தில் நாளை காலை ராமதாஸ் முக்கிய அறிவிப்பை வெளியிட உள்ளதாகவும் தகவல்கள் வெளியாகி உள்ளன. அந்தவகையில் கடலூர் மாவட்ட நிர்வாகிகளை மாற்றியமைத்த நிலையில், இன்று திருப்பூர் மாவட்ட நிர்வாகிகளை நியமித்து உள்ளார். கடந்த ஆண்டுகளில் இருந்த கட்சி முழுமையாக கலைக்கப்பட்டு, புதிய நிர்வாகிகள் நியமனம். இந்த நிலையில் திருப்பூர் மாவட்டத்தைச் சேர்ந்த திலகபாமா பாமக பொருளாளராக நியமிக்கப்பட்டார். தற்போது அந்த மாவட்டத்திற்கு புதிய நிர்வாகிகளை பாமக நிறுவனர் ராமதாஸ் நியமித்திருக்கிறார். திருப்பூர் வடக்கு மாவட்ட செயலாளர் ஜெயமுருகன் திருப்பூர் வடக்கு மாவட்ட தலைவர் சரவணன் திருப்பூர் மாநில இளைஞரணி சங்க செயலாளர் விஜயகுமார் திருப்பூர் தெற்கு மாவட்ட தலைவர் வி.எஸ். கோவிந்தராஜ் திருப்பூர் தெற்கு மாவட்ட செயலாளர் மணிகண்டன் திருப்பூர் கிழக்கு மாவட்ட செயலாளர் பிரபு ராஜேந்திரன் திருப்பூர் மேற்கு மாவட்ட தலைவர் பழனிசாமி திருப்பூர் மேற்கு மாவட்ட செயலாளர் வெங்கடாசலம் ஆகியோர் புதிதாக நியமனம் செய்யப்பட்டுள்ளனர். பாமகவை பொறுத்தவரை தமிழகம் முழுவதும் மொத்தமாக 108 மாவட்ட செயலாளர்கள் உள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் நிறுவனர் ராமதாஸ் நியமிக்கப்பட்டுள்ளார்கள். மேலும் உள்ள மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாவட்ட தலைவர்கள் ராமதாஸுக்கு ஆதரவாக இருப்பதால் அவர்கள் மாற்றப்பட வாய்ப்பு இல்லை என்றும் கூறப்படுகிறது.

அருப்புக்கோட்டை அருகே பட்டாசு ஆலை விபத்து: முதல்வர் மு.க.ஸ்டாலின் நிவாரணம் அறிவிப்பு

விருதுநகர், ஜூன்.12

விருதுநகரில் பட்டாசு ஆலையில் ஏற்பட்ட வெடி விபத்தில் 3 தொழிலாளர்கள் உயிரிழந்த நிலையில், முதலமைச்சர் ஸ்டாலின் நிவாரணம் அறிவித்துள்ளார்.

விருதுநகர் மாவட்டம் காரியாபட்டி அடுத்த வடகரையில் பட்டாசு ஆலை ஒன்றில் திடீரென வெடி விபத்து ஏற்பட்டுள்ளது.

இதில் 3 தொழிலாளர்கள் உயிரிழந்துள்ள நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் நிவாரண நிதி அறிவித்துள்ளார். விருதுநகர் மாவட்டம் அருப்புக்கோட்டை அருகே காரியாபட்டியை அடுத்த

வடகரையில் ராஜா சந்திரசேகரன் என்பவருக்கு சொந்தமான பட்டாசு ஆலை ஒன்று செயல்பட்டு வருகிறது. இங்கு தொழிலாளர்கள் பலர் வேலை செய்து வருகின்றனர்.

வழக்கம் போல் பணியில் ஈடுபட்டு வந்துள்ளனர். இந்த நிலையில், இன்று (ஜூன் 11) திடீரென வெடி விபத்து ஏற்பட்டுள்ளது. இதுகுறித்து தகவல் அறிந்த தீயணைப்பு படையினர் சம்பவஇடத்திற்குவிரைந்து நீண்ட நேரம் போராடி தீயை கட்டுக்குள் கொண்டுவந்தனர். இந்த விபத்தில் பட்டாசு ஆலை முற்றிலுமாக இடிந்து தரைமட்டமானது. விபத்தில் 3 பேர் சம்பவ இடைத்திலேயே உயிரிழந்தனர். மேலும், 3 பேர் பலத்த காயம் அடைந்தனர். அவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனையில் அனுமதித்துள்ளனர். வெடி விபத்தில் 3 தொழிலாளர்கள் உயிரிழந்த சம்பவம் பெரும் சோகத்தை ஏற்படுத்தி உள்ளது. இந்த பயங்கர வெடி விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். இந்த நிலையில், தமிழக முதலமைச்சர் மு.க. ஸ்டாலின், உயிரிழந்தவர்களுக்கு இரங்கல் தெரிவித்துள்ளார்.

மேலும், உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 4 லட்சம் ரூபாயும், காயம் அடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களுக்கு தலா 1 லட்சம்ரூபாயும்லேசான காயம் அடைந்தவர்களுக்கு தலா 50000 ரூபாயும் நிவாரண உதவியாக அறிவித்துள்ளார்.

பா.ஜ.க.வுடன் ம.தி.மு.க. கூட்டணியா? யாரும் பேசவில்லை என துரை வைகோ கருத்து

சென்னை, ஜூன்.12

பாஜகவுடன் கூட்டணி பேச்சுவார்த்தை நடத்தவில்லை என்று மதிமுக எம்பி துரை வைகோ உறுதியாக கூறியுள்ளார். சட்டமன்றத் தேர்தல் கூட்டணி குறித்து தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன்கூறியகருத்து அவரின் அரசியல் யுக்தியாக இருக்கலாம் என்றும் விளக்கம் அளித்துள்ளார். அண்மையில் மத்திய உள்துறை அமைச்சர் எல்.முருகன், செப்டம்பரில் திமுக கூட்டணி உடையும். திமுக கூட்டணியில் உள்ள ஒரு கட்சியுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இன்னும் 3 மாதங்களில் பாஜக கூட்டணி விரிவடையும். இந்த கட்சி வாஜ்பாய் ஆட்சிக் காலத்தில் பாஜகவுடன் கூட்டணி வைத்திருந்த கட்சி தான். புதிதாக வரவிருக்கும் கட்சிகள் யார் என்று பொறுத்திருந்து பாருங்கள் என்று தெரிவித்

தார். வாஜ்பாய் ஆட்சியில் பாஜகவுடன் இருந்த கட்சி என்று எல்.முருகன் கூறியதால், திமுக கூட்டணியில் இருந்து மதிமுக விலகுகிறதா என்ற கேள்விகள் எழுந்தன. இதுகுறித்து நயினார் நாகேந்திரன் பேசுகையில், எல்.முருகன் கூறிய கருத்து உண்மைதான். திமுககூட்டணியில் உள்ள கட்சிகளோடு பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. தேசிய ஜனநாயக கூட்டணியில் பல கட்சிகள் இணையும் என்று கூறினார். அப்போது மதிமுக உடன் பேச்சுவார்த்தை நடக்கிறதா என்ற கேள்விக்கு, இப்போது விரிவாக எதையும் சொல்ல முடியாது என்று பதில் அளித்தார். திமுக கூட்டணியை பொறுத்தவரை 2019 நாடாளுமன்றத் தேர்தலில் இருந்து காங்கிரஸ், விசிக, சிபிஎம், சிபிஐ, மதிமுக, கொமதேக, முஸ்லீம் லீக் என்று அனைத்து கட்சிகளும் இணக்கமாக உள்ளன. தற்போது அந்த கூட்டணியில் மக்கள் நீதி மய்யம் கட்சியும் 2024 நாடாளுமன்றத் தேர்தலின் போது இணைந்து கொண்டது. திமுக ஆட்சி மீது சில விமர்சனங்கள் இருந்தாலும், இதுவரை எந்த கட்சியும் கூட்டணியில் இருந்து விலகவில்லை. இந்த நிலையில் எல்.முருகன் மற்றும் நயினார் நாகேந்திரன் ஆகியோரின் கருத்து குறித்து மதிமுக எம்பி துரை வைகோ விளக்கம் கொடுத்துள்ளார். அதன்படி துரை வைகோ பேசுகையில், பாஜகவுடன் கூட்டணி குறித்து நூற்றுக்கு நூறு சதவிகிதம் எதுவும் பேசவில்லை. கூட்டணி தொடர்பாக வைகோவும் பாஜகவுடன் பேசவில்லை என்பதும் உறுதி. நயினார் நாகேந்திரன் பேசியது அவரின் அரசியல் யுக்தியாக இருக்கலாம் என்று தெரிவித்துள்ளார். இதனால் எல்.முருகன் கூறியது எந்த கட்சி என்ற விவாதம் நடந்து வருகிறது. அதேபோல் திமுக கூட்டணியை பிரிப்பதில் பாஜக தீவிரமாக இருந்து வருவதாக சொல்லப்படுகிறது. குறிப்பாக விசிகவை கூட்டணியில் இருந்து பிரிக்கவும் பேச்சுவார்த்தை நடப்பதாக கூறப்படுகிறது. அதற்கேற்ப இன்னொரு பக்கம் விசிக, சிபிஎம் உள்ளிட்ட கட்சிகள் அதிக தொகுதிகளை எதிர்பார்ப்பதும் பேசுபொருளாகி இருக்கிறது.

எல்&டி பைனான்ஸ் லிமிடெட்
(முந்தைய பெயர் எல்&டி பைனான்ஸ் ஹோல்டிங்ஸ் லிமிடெட்)
பதிவு அலுவலகம்: எல்&டி பைனான்ஸ் லிமிடெட் பிருந்தாவன் பில்டிங், ஃபிளாட் நம்பர் 177, சிஎஸ்டி ரோடு, கலினா, சாந்தாகுரூஸ் (ஈஸ்ட்), மும்பை - 400 098.
சிஇஎன் நம்பர்: L67120MH2008PLC181833
கிளை அலுவலகம்: சென்னை

L&T Finance

அடைமானம் வைக்கப்பட்ட சொத்தின் விற்பனைக்கான பொது ஏலம்

எல்&டி ஃபைனான்ஸ் லிமிடெட்-ன் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி செக்யூரிட்டிசேஷன் அண்ட் ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஆஃப் பைனான்சியல் அசெட்ஸ் அண்ட் என்ஃபோர்ஸ்மெண்ட் ஆஃப் செக்யூரிட்டி இன்டரஸ்ட் ஆக்ட் 2002 (54 ஆஃப் 2002) கீழ் மற்றும் மேற்படி சட்டத்தின் கீழ் அவருக்குரிய அதிகாரங்களை பயன்படுத்தி கீழ்க்கண்ட சொத்தை **''இருக்கும் இடம்'' மற்றும் ''இருக்கும் நிலை''** என்ற அடிப்படையில் **''பொது ஏலம்''** மூலம் கடன் பாக்கி மற்றும் அது சம்பந்தமான கூடுதல் வட்டி, கட்டணங்கள் மற்றும் செலவினங்களை வசூலிக்க ஏலம் விட உள்ளார்.

கடன்தாரர் மற்றும் உப கடன்தாரர் பெயர்	பிணையச் சொத்து முகவரி	கடன் கணக்கு எண்	சொத்து கையகப்படுத்தப்பட்டது	ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அல்லது அதிகம் (₹)	31.01.2025 அன்று பஇ மொத்தம் நிலுவை பாக்கி தொகை	ரிசர்வ் விலை (₹)	ஆய்வு தேதி	ஏலத்தின் தேதி மற்றும் நேரம்
1. ஆனந்த் பாபு எஸ் 2. சௌம்யா எம்	சொத்தின் முகவரி - ப்ளாட் எண் S2, இரண்டாவது தளம், ஹிதேஷ் என்கிளேவ் எனப்படும் கட்டிடத்தில், மனை எண் 96 கொண்ட நிலத்தின் மீது அமைந்துள்ளது மற்றும் மேற்கு பகுதி மனை எண் 95 ஆகும். மொத்த அளவை 3900 சதுர அடி. அமைந்துள்ள இடம் ஸ்ரீ பாலாஜி நகர் - கிழக்கு - 5வது தெரு (தற்போது 3வது பிரதான சாலை), கான்க திட்ட அனுமதி எண்கள் PPA/WD CN07/6993/2013 மற்றும் PPA/WD CN07/7019/2013, கட்டிட அனுமதி எண்கள் BA/WD CN07/03270/2014 மற்றும்BA/ WD CN07/03268/2014, சர்வே எண் 765/1b மற்றும் 765/1a1 கொரட்டூர் கிராமம், அம்பத்தூர் வட்டம், திருவள்ளூர் மாவட்டம், மத்திய சென்னையின் பதிவு மாவட்டம், வில்லிவாக்கத்தின் துணை பதிவு மாவட்டத்திற்குள் அமைந்தது. மனை எண் 96-ன் எல்லைகள்: கிழக்கு: மனை எண் 95-ன் மேற்கு பகுதி; மேற்கு: மனை எண் 97; வடக்கு: 25 அடி அகல சாலை; தெற்கு: மனை எண் 80 மற்றும் 81 மனை எண் 95-ன் எல்லைகள்: கிழக்கு: மனை எண் 95-ன் கிழக்கு பகுதி; மேற்கு: மனை எண் 96; வடக்கு: 25 அடி அகல சாலை; தெற்கு: மனை எண் 80 மற்றும் 81	CHNHL17000319 / CHNHL17000330	12.11.2023	ரூ. 3,70,000/-	ரூ.99,17,034.29/-	ரூ. 37,00,000/-	முன் அப்பாயின்ட்மென்ட் உடன் அனைத்து பணி நாட்களிலும் காலை 10.00 மணி முதல் மாலை 5.30 மணி வரை	30.06.2025 மதியம் 12 மணி முதல் மாலை 2.00 மணி வரை

பொது ஏலத்தின் விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள்

1. மின்னணு ஏல விற்பனை, சர்ஃபேஸி சட்ட பிரிவுகளின் கீழ் மற்றும் பொது மின்னணு ஏல முறை மூலம் https://sarfaesi.auctiontiger.net/EPROC/ இணையதளம் மூலம் அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் ஆன்லைனில் நடத்தப்படுகிறது.
2. இங்கே மேலே குறிப்பிடப்பட்ட நாள் அன்று மற்றும் நேரத்தில் பொது மின்னணு ஏலம் நடத்தப்படும், மேலே குறிப்பிடப்பட்ட பிணை சொத்து **''எங்கே உள்ளது என்பதன் அடிப்படையில்'' மற்றும் ''எந்த நிலையில் உள்ளது என்பதன் அடிப்படையில்''** விற்கப்படும்.
3. பொது மின்னணு ஏலத்தில் பங்கேற்பதற்காக, உத்தேசித்துள்ள வாங்குபவர்கள் / ஏலதாரர்கள் ஏல படிவத்தை, திருப்பியளிக்கத்தக்க பிணை சொத்தின் ரிசர்வ் விலையின் பிணை உறுதிப் பணம் வைப்பு 10% அத்துடன் பான் அட்டை, நிறுவனம் என்னும் நிலையில் குழு தீர்மானங்கள் மற்றும் முகவரிச் சான்று நகல்களை 28/06/2025 அன்று அல்லது அதற்கு முன்பாக சமர்ப்பிக்க வேண்டும்.
4. பொது மின்னணு ஏலத்தில் வெற்றி பெற முடியாத இதர அனைத்து ஏலதாரர்களின் பிணை உறுதிப் பணம் வைப்பு தொகை பொது மின்னணு ஏலம் முடிவுற்ற 7 நாட்களுக்குள்ளாக LTFல் திருப்பி அளிக்கப்படும். பிணை உறுதிப் பணம் வைப்பு தொகைக்கு எந்த வட்டியும் கிடையாது.
5. மின்னணு ஏலத்தில் வெற்றி பெறும் வாங்குபவர்/ஏலதாரர் அவரது/அதன் ஆஃபரில் 25% தொகையை (இஎம்ஐ உட்பட) எல்&டி பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயரில் மதுரையில் பெறத்தக்கதாக டி.டி./பி. ஓ மூலம் 30/06/2025 தேதி அன்று 18.00 மணிக்குள் அல்லது அதற்கு முன்பு அதாவது ஏல தேதி அன்று அல்லது அடுத்த அலுவல் நாளில் அதாவது 01/07/2025அன்று செலுத்தப்பட்டு அந்த டெபாசிட் தொகை பெற்றுக் கொள்ளப்பட்டதாக எல்&டி பைனான்ஸ் லிமிடெட் நிறுவனத்தால் உறுதி செய்யப்பட வேண்டும். இல்லையெனில் விற்பனை தோல்வி அடைந்து விட்டதாக கருதப்பட்டு வெற்றி பெற்ற ஏலதாரரின் இஎம்டி பறிமுதல் செய்யப்படும். வாங்கும் விலையில் மீதி தொகை அதாவது 75% வாங்குபவரால் எல்&டி பைனான்ஸ் லிமிடெட்டுக்கு, அசையா சொத்து விற்பனை உறுதி செய்யப்பட்ட பின் பதினைந்தாம் நாள் அன்று அல்லது அதற்கு முன்பாக அல்லது சட்டப்பிரிவுகளின்படி இத்தகைய நீட்டிக்கப்படும் காலவரம்பிற்குள் செலுத்தப்பட வேண்டும்.
6. சொத்து ஆய்வு செய்வதற்காக அல்லது அதிக தகவலுக்கு, வாய்ப்புள்ள ஏலதாரர்கள், அங்கீகாரம்பெற்ற அதிகாரியுடன் தொடர்பு கொள்ளலாம், அதாவது **பெயர் - சதீஷா ஆர், மற்றும் சந்தோஷ் திவாரி, எல்-டி ஃபைனான்ஸ் லிமிடெட், அலுவலகம் : 6வது தளம், பிருந்தாவன் பில்டிங், பிளாட் எண் 177, கலினா, சிஎஸ்டி ரோடு, மர்சிடெஸ் ஷோரூம் அருகில், சாந்தாக்ரூஸ் (கிழக்கு), மும்பை - 400098. தொடர்பு எண் 022-68076666** இ- ஏலத்தின் எந்த நிலையிலும், அங்கீகாரம்பெற்ற அதிகாரி எந்த காரணத்தையும் குறிப்பிடாமல் மற்றும் எந்த முன் அறிவிப்பும் இன்றி, ஏலத்தை ஏற்கலாம்/ நிராகரிக்கலாம்/ திருத்தலாம்/ ஏலத்தை/சலுகையை ரத்து செய்யலாம் அல்லது தள்ளிப் போடலாம்.
7. வெற்றி பெற்ற வாங்குபவர்/ஏலதாரர் சொத்தை தன்னுடைய பேரில் சாதகமாக மாற்றிக்கொள்ள பொருந்தும் சட்டத்தின் படி, ஏதேனும் சட்டபூர்வ நிலுவைத் தொகைகள், வரிகள், செலுத்த வேண்டிய கட்டணங்கள், முத்திரை வரி, பதிவு கட்டணங்கள் முதலியவற்றை ஏற்றுக்கொள்ள வேண்டும்.
8. மேற்கண்ட பாக்கித் தொகைகளுக்கு பொறுப்பான வாங்குபவர்/உத்தரவாதிகள் இந்த விற்பனை அறிவிப்பை, பொது மின்னணு ஏல விற்பனையை நடத்த, செக்யூரிட்டி இன்டரஸ்ட் (என்ஃபோர்ஸ்மெண்ட்) ரூல்ஸ் விதி 8(6) கீழ் ஒரு அறிவிப்பாக கருதும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.
9. கடன் வாங்குபவர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) மேலே குறிப்பிட்டபடி கடன் நிலுவையில் உள்ள முழு நிலுவைத் தொகையையும் மேற்கூறிய மின்னணு ஏலத் தேதிக்கு முன்னர் செலுத்தும்படி கேட்கப்படுகின்றனர். அவ்வாறு செலுத்தத் தவறினால், எல்&டி பைனான்ஸ் லிமிடெட், சர்ஃபேசி சட்டம், 2002 கீழ் குறிப்பிடப்பட்டுள்ள விதிகளின்படி சொத்தை விற்கும்.
10. கடன்தாரர் (கள்) / உப கடன்தாரர் (கள்) / உத்தரவாதி (கள்) / பிணையதாரர் (கள்) / பொது மக்கள் எல்&டி பைனான்ஸ் லிமிடெட் இடும் முன்னரே எழுத்துப்பூர்வமான அனுமதி பெறாமல் சம்பந்தப்பட்ட பிணைய சொத்துக்களை விற்பனை செய்தல். குத்தகைக்கு விடுதல் மற்றும் இதர நடவடிக்கைகளை கையாள்வதில் இருந்து தடைசெய்யப்பட்டுள்ளனர்.

தேதி: 12.06.2025
இடம்: சென்னை

கையெழுத்து/-
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
எல்&டி பைனான்ஸ் லிமிடெட்